சங்கரானந்தம்



காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்

தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.
98847 18 324







நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் அகம் குளிர வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹாஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹாஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ
மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை 126.







நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் அகம் குளிர வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹாஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹாஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ
மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை 126.







நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் அகம் குளிர வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹாஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹாஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ
மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை 126.

காஞ்சி மஹாஸ்வாமிகளின் தாய் தந்தையர்

பொய், பயம், பொறாமை, நிந்தனை ஆகிய அழுக்குகளைப் போக்குகிற சோப்பு , சீயக்காய் , அரப்பு, வாசனைப் பொடி மாதிரி சத்தியம் , தைரியம் , விட்டுக் கொடுக்கிற சுபாவம் , இன்சொல் ஆகியன இருக்கின்றன. இப்படியே நம் மன அழுக்கைப் போக்குகிற நல்ல குணங்கள் பல இருந்தாலும் கூட , வேறொரு ஜலம் இல்லாவிட்டால் இந்த நல்ல குணங்கள் மாத்திரம் நமக்கு மனத்தூய்மையைக் கொடுக்க மாட்டா. அந்த ஜலம் தான் தெய்வ பக்தி. எல்லா அழுக்குகளும் நீங்குவதற்கு , கங்கா ஸ்நானமாக இருப்பது , ஸ்வாமியிடம் செய்கிற பிரார்த்தனை தான்.

-மஹா பெரியவா.

அபார கருணா ஸிந்தும் ஞானதம் சாந்த ரூபிணம்
ஸ்ரீ சந்திர சேகர குரம் ப்ரணமாமி முதான்வஹம்

-பெரியவா

லக்ஷயதேசைர் நாஸ்திக்ய பாவமர்த்தன கோவிதம்
சிவம் ஸ்மிதமுகம் சாந்தம் ப்ரணதோஸ்மி ஜகத்குரும்

-பால பெரியவா.

மஹாசிவ ரூபனே மஹாபெரியவா (30.12.2012)

மஹாபெரியவா காஞ்சி மஹாபெரியவா
மண்ணுலகம் வந்த சிவனே மஹாபெரியவா
மஹாபெரியவா காஞ்சி மஹாபெரியவா
மனக்குறைகள் தீர்த்து மகிழும் மஹாபெரியவா

அன்புருவம் கொண்டவரே மஹாபெரியவா
ஆனந்தம் தரும் கோலம் மஹாபெரியவா
இன்முகம் காட்டுபவர் மஹாபெரியவா
ஈசனின் அம்சமே மஹாபெரியவா

உற்சவராய் உலா வந்தார் மஹாபெரியவா
ஊர்தோறும் நடந்தாரே மஹாபெரியவா
என்றும் அவர் புகழ் பாட மஹாபெரியவா
ஏற்றங்கள் அளிப்பாரே மஹாபெரியவா

ஐயங்கள் களைபவரே மஹாபெரியவா
ஒப்புயர்வு அற்ற மஹான் மஹாபெரியவா
ஓர் பரப் பிரம்மமே மஹாபெரியவா
ஔடதமே நமக்கென்றும் மஹாபெரியவா

கண்கொண்டு பார்த்திட்டால் மஹாபெரியவா
காருண்யம் பொங்கிடுமே மஹாபெரியவா
கிட்டிடுமே கைலாயம் மஹாபெரியவா
கீர்த்திகளை பாடி மகிழ்வோம் மஹாபெரியவா

குறையொன்றும் வாராதே மஹாபெரியவா
கூப்பி உம்மை கை தொழுதால் மஹாபெரியவா
கெட்டியாக பாதம் பற்ற மஹாபெரியவா
கேட்ட வரம் அருள்வீரே மஹாபெரியவா

கை தொழுதால் கை கொடுப்பீர் மஹாபெரியவா
கொட்டும் மேளம் மனதினுள்ளே மஹாபெரியவா
கோடி சந்திர பிரகாசரே மஹாபெரியவா
கௌபீன தாரியே மஹாபெரியவா

மஹாபெரியவா அதிஷ்டான தரிசன கானம்(02-03-13)

(பிருந்தாவனமும் நந்தகுமாரனும் - மெட்டு)



பிருந்தாவனம் வந்து தரிசிக்க உம்மை
விருந்தாகும் உந்தன் புன்சிரிப்பே
வருந்தியே நாங்கள் வந்திட உடனே
மருந்தாகும் உந்தன் தரிசனமே

வந்திட்ட பக்தர்க்கு தந்திடு வீரே
சந்திர முகத்தோடு கல்கண்டே
நொந்திட்ட பக்தரும் உன்திட்டப் படியே
வந்திட அருள்வீர் வள்ளலாக

சந்தன மலர்போல் செந்தணல் உருவம்
உந்தன் முகமொரு சூரியனே
வந்தனம் செய்து வருத்தத்தைச் சொல்ல
உந்தன் அருளை பொழிவீரே

வந்துன் காலடி வீழ்ந்திட உடனே
எந்தன் ஆழ்மனம் குதூகளிக்கும்
உந்தன் ஓரக்கண் பார்வை கிடைத்திட
எந்தன் கண்கள் குளமாகும்

வருந்தாத உள்ளத்தை வருந்திடச் செய்வீர்
பருந்தாக பார்த்தே மஹாஸ்வாமி
திருந்தாத உள்ளங்கள் திருந்திடச் செய்வீர்
தீரா நோய் தீர்ப்பீர் மஹாஸ்வாமி

நெருங்கியே வந்தால் உருகிட வைப்பீர்
பெருங் காவியம்நீர் மஹாஸ்வாமி
சுருங்கிய நெற்றியும் விரிந்திட்ட கண்களும்
அருங்காட்சி யாகும் மஹாஸ்வாமி

காந்தக் கண்கொண்ட காருண்ய ரூபனே
காணவே வந்தேன் மஹாஸ்வாமி
காந்தள் மலர்போன்ற சிரிப்பைக் காண
கண்கோடி வேண்டும் மஹாஸ்வாமி

முந்தைய வினைதீர்க்கும் முழுமதி முகமே
எந்தை சிவனே மஹாஸ்வாமி
தந்தை தாயாய் என்றும் காப்பார்
விந்தை குருவே மஹாஸ்வாமி

ஓரிருக்கை கொண்டவர்க்கோர் கானம் 23.03.13

(பாக்கியாத லக்ஷ்மி பாரம்மா - மெட்டு)

பொற்பாதம் காண வாருங்கள்
ஓர் அற்புத மஹானின்
பொற் பாதம் காண வாருங்கள்

ஓரிக்கை தலமே ஓர்நாள் வாரீர்
கூப்பி கை தொழுதே கூறிட குறையே
கோரிக்கை யாவும் நிறைவேறும் உடனே
வாரி கை அள்ளி வரமே தருவார்

பாலாறே செய்யும் பால் அபிஷேகம்
காலடி சங்கரர்(நாதனின்) பொன்னிற தேகம்
காலாற நடந்தவர்க்கு கனகாபிஷேகம்
தாலாட்டாய் பாடிடும் தென்றலே கீதம்

தாயாய் பலரை காத்திட்ட தூயவர்
சேயாய் மலரடி சேவிக்க வாரீர்
பேயாய் அலைந்தே பாவம் செய்தோர்
பாய்ந்தே வந்து பாவங்கள் தீர்ப்பீர்

சொற்கோயில் சமைத்தார் நாயன் மாரே
பொற்கோயில் ஆனது பலகற் கோயிலே
நற்கோயில் பலஉண்டு நமசி வாயர்க்கே
ஓர் கோயில் இங்கே அவர் பாதத்திற்கே

வேட்கையை தணிக்கும் வேடல் கானம் 13.04.2013

(பிரம்ம முராரி - மெட்டு)

வேடல் தலத்தை தரிசித்த உடனே
நாடியே நன்மைகள் நமை வந்து சேரும்
தேடியே சென்றிட தேவைகள் தீரும்
வாடிய முகங்கள் மலர்ந்து பூவாகும்

வேடல் தலத்தை தரிசிக்க நாமே
தேடல் தீர்ந்தது போல் உணர்வோமே
பாடல் பாடி பஜனைகள் செய்வோம்
ஆடல் பாடலாய் ஆனந்த மடைவோம்

வேடல் தலத்தில் வேண்டிய உடனே
கேடில்லா வாழ்க்கை கிட்டிடும் உடனே
நாடியே பெறுவோம் நலன்கள் அனைத்தும்
பாடியே மகிழ்வோம் பரமனின் கருணை

வேடல் தலத்தில் வேண்டிய தருள
காலடி சங்கரர் காத்திருக் கின்றார்
ஆலடி அமர்ந்த தென்முக சிவனே
காலடி வந்த கருணையை பாரீர்

காலடி சங்கரர் கதையை அறிவோம்
காலடியில் நதி வந்ததை அறிவோம்
காலடி தெய்வத்தின் சேவடி போற்றி
காலடி தொடர்ந்து நடந்திடு வோமே

காலடி சங்கரர் காஞ்சிக்கு வந்தார்
தேரடி வீதியில் தேஜஸாய் அமர்ந்தார்
நேரடி பார்வையில் ஆன்மீகம் வளர்த்தார்
அவரடி போற்றி அனந்தம் அடைவோம்

காஞ்சி மஹாஸ்வாமி மஹா பெரியவா
காருண்ய கைகள் பட்டே மலர்ந்தே
காணக் கிடைக்கா காட்சிப் பொருள்கள்
காணக் காண இன்பம் பொங்கும்

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர
ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர
காஞ்சி சங்கர காமகோடி சங்கர
காமகோடி சங்கர காமாக்ஷி சங்கர

மஹாஸ்வாமி - அனுஷ கானம்

(28.04.13 அனுஷ நட்சத்திரத்தன்று
மஹாபெரியவாளின் கருணையால் எழுதியது)

அனுஷத்தில் பிறந்திட்ட காஞ்சி மாமுனியே
நிமிஷத்தில் அருள்வார் நித்திய இன்பம்
வருஷத்தில் பன்னிரெண்டு அனுஷத்தில் வழிபட
கிரகதோஷம் போக்கி சந்தோஷம் அளிப்பார்

ஜெகம்காக்க வந்திட்ட ஜெகத்குரு அவரின்
முகம்பார்க்க மலர்வோம் முன்வினை தீர்ந்து
யுகம் யுகமாக காத்திடும் அவரை
அகம்தனில் நினைத்து அர்ச்சிப் போமே

ஈஸனினன் அம்சமாய் காசிக்கும் நடந்தார்
தேசங்கள் காத்திட நேசமாய் நடந்தார்
பாசமாய் மக்களை பாரினில் வென்றார்
தாசனாய் மாறிட தயை புரிவாரே

வேதத்தை வளர்த்திட பாதத்தால் நடந்தார்
கீதங்கள் பாடிட ஊக்கங்கள் தந்தார்
ஓர்திங்கள் ஓரிடம் என்றே பறந்தார்
நேர்த்தியாய் வாழ்ந்திட நடந்தே காட்டினார்

கருவறை சிவனார் உருக்கொண்டு வந்தார்
தெருவெங்கும் நடந்தார் தெய்வீக சிலையாய்
வருவோர் குறைதீர்த்து வளர்ந்திட செய்தார்
குருவாய் வருவார் இருட்டிலும் துணையாய்

திருக்கோயில் வழிபாடு திருந்திட செய்தார்
ஒருகோயில் ஊருக்குள் சிறந்திட செய்தார்
கற்கோயில் பலவற்றை திருப்பணி செய்தார்
நற்கோயில் நாடி நம்மனம் புகுந்தார்

மனதினுள் மஹாஸ்வாமி உள்ளார் என்றே
நினைத்தே நாளும் நடந்திடு வோமே
தினைஅள வேனும் அவர்வழி நடக்க
நினைத்திட உயர்வோம் வாழ்வில் தானே

இருட்டை விலக்கும் கை விளக்காக
அருட்குரு அவரின் பாதையில் செல்வோம்
பொருட் செலவின்றி பொக்கிஷம் பெறுவோம்
அருட்காட்சி கிடைத்து ஆனந்த மடைவோம்

மஹா ஸ்வாமி மகிமை கானம் (26.05.13)

(நாத விந்து கலாதி நமோ நமோ-மெட்டு)

காஞ்சி தலத்தில் காட்சி அளித்து
காக்கும் ஹரனே காருண்ய ரூபனே
யார்க்கும் எங்கும் எப்போதும் நீரே – மஹா ஸ்வாமி

அன்பினாலே ஆன்மீகம் வளர்த்தீர்
அன்பால் அனைவரை ஆட்கொண்டீரே
அன்போடு ஆன்மீக ஆனந்தம் அளித்தீர் – மஹா ஸ்வாமி

அன்னம் பாலித்து அரும்பசி தீர்ப்பீர்
எண்ணம் அறிந்தே ஏற்றங்கள் தருவீர்
மின்னும் முகம் கொண்ட காமாக்ஷி நீரே – மஹா ஸ்வாமி

வேத கோஷங்கள் முழங்கிடச் செய்தீர்
பாத யாத்திரை பல சென்றீரே
பாத பங்கஜம் பணிந்தே மகிழ்வோம் – மஹா ஸ்வாமி

அழுத குழந்தைக்கு பாலுட்டும் தாய் போல்
தொழுத மனதின் பழுதை சரிசெய்வீர்
எழுத இயலுமோ உந்தன் புகழை – மஹா ஸ்வாமி

மண்ணில் பிறந்திட்ட மஹேசன் நீரே
கண்ணில் கனிவோடு தாயும் ஆனவா
என்னுள் என்றும் உறைந்தே அருள்வீர் – மஹா ஸ்வாமி

எண்ணில்லா கோவில் எழும்பிட செய்தீர்
மண்ணில் கண்டீர் மஹா லிங்கங்கள்
கண்ணில் காந்தமே கொண்டே இழுப்பீர் – மஹா ஸ்வாமி



ஆன்மிக குருவிற்கோர் ஆனந்த ஊஞ்சல் கானம் (26.05.13)

(நீலக்கடலின் ஓரத்தில் - மெட்டு)

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
ஆன்மீக குருவே ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
ஆனந்த மாக ஆடுகவே

அன்பை போதிக்க வந்தீரே
ஆன்மா லயித்திட செய்தீரே
இன்முக இளவல் நீரய்யா
ஈஸனின் அம்சமாய் வந்தீரே

உன்புகழ் பாடிட உன்னதமே
ஊர்தோறும் அருளை பொழிந்தீரே
என்றும் உன்தன் வழி நடந்தே
ஏற்றங்கள் வாழ்வில் பெற்றிடுவோம்

ஐயங்கள் களைந்து அருள் புரிந்தீர்
ஒப்பிலா குருவாய் திகழ்ந்தீரே
ஓர் முறை உம்மை தரிசிக்க
ஔஷத மாய்நோய் தீர்த்தருள்வீர்

வேதத்தை காத்திட வந்தீரே
தேகத்தை மறந்து நடந்தீரே
பாதத்தை பற்றிட காப்பீரே
மோட்க்ஷத்தை தந்து அருள்வீரே

ஓய்வின்றி ஊர்தோறும் சென்றீரே
தொய்வின்றி தொலைதூரம் நடந்தீரே
பாய் இன்றி படுத்துக் கிடந்தீரே
நோய் இன்றி மக்களைக் காத்தீரே

கோயில்கள் தோறும் விளக்கேற்றி
போயிடச் செய்தீர் இருள்தனையே
தாயிற் சிறந்த தயையோடு
ஆயிரம் கோயில்கள் சரிசெய்தீர்

விழுப்புரம் தலத்தில் பிறந்தீரே
முழுபரம் பொருளாய் ஜொலித்தீரே
பழுத்த ஆன்மிகம் பரவிடவே
பழுத்திடச் செய்தீர் பக்தியையே

கலவையில் குருவாய் ஆனீரே
சலவை செய்தீர் மனங்களையே
வலம் வந்துனையே பணிந்திடவே
நலம் அருள்வீரே மஹாஸ்வாமி

காஞ்சியில் அமர்ந்தீர் கலசமாக
வாஞ்சையோ டருள்வீர் வள்ளலாக
நெஞ்சினில் உம்மை நினைத்திடவே
எஞ்சிய வாழ்வே சிறப்பாகும்.

ஆதி சங்கரா அத்வைத சங்கரா 27.05.2013

(ஹரிவராசனம் மெட்டு)

ஆதி சங்கரா அத்வைத சங்கரா
காஞ்சி சங்கரா காமாட்சி சங்கரா
ஜோதி சங்கரா சிவ ரூப சங்கரா
பாதி பிறைகொண்ட சந்திர சேகரா

சந்த்ர சேகர மஹா ஸ்வாமியே
மந்திர தந்திரம் நானறியேனே
உன்திருப் பெயரே உளமார ஓதுவேன்
என்னிரு விழியால் உனை கண்டு மகிழ்வேன்

உன்னை வணங்கியே நித்தம் எழுவேனே
உன்னை பூஜித்தே சித்தம் தெளிவேனே
உன்னை எண்ணியே உழல்வேன் நாளுமே
உன்னை போற்றியே சுழல்வேன் மண்ணிலே

உந்தன் நெற்றியை காண வெற்றியே
உந்தன் பூமுகம் காண மலர்வோமே
உந்தன் கண்களை காண கிறங்குவோம்
உந்தன் கைகளை காண துடிப்போம்

வாய் திறந்து நீ பேச மகிழ்வோம்
மெய் மறந்து தான் கேட்டு மகிழ்வோம்
தாய் பாசத்தை உணர்ந்தோம் உன்னிடம்
பொய் வேஷத்தை விட்டோம் உன்னிடம்

அற உரைகள் நீ ஆற்றிடுவாயே
அறிவுரைகள் நீ தந்திடு வாயே
வரைமுறை இன்றி வாழ்ந்து நொந்தோம்
வரை முறையோடு இனி வாழ்ந்து வெல்வோம்

மஹா பெரியவா காஞ்சி மஹா பெரியவா
மஹான்கள் வணங்கும் மஹா பெரியவா
மஹா பெரியவா எங்கள் மஹா பெரியவா
மஹா பாக்கியம் எங்கள் மஹா பாக்கியம்

திகட்டாத தேனாம் தேனம்பாக்கம் (28.05.13)

தேனம்பாக்கத்தில் தவம் செய்தீரே
வானம் பார்த்த பூமியில் நீரே
கானம் பாடி குயில்கள் கூவ
வானம் பாடியாய் வாழ்ந்தீர் நீரே

பிரம்மா பூசித்த லிங்கத்தை நீரே
சிர மேற்கொண்டு சரி செய்தீரே
பர மேஸ்வரனின் மடியில் நீரே
கரம் குவித்தபடி கணபதி கண்டீர்

ஆதி சங்கரர் பூஜித்தார் இவரை
ஆதி நாளில் காஞ்சியில் வசித்து
பாதி வட்டக் கருவரை உள்ளே
ஆதி சங்கரர் உள்ளார் இன்றும்

பிரம்ம புரீஸ்வரர் திருத்தாள் பணிய
சிரமங்கள் குறைகள் சிக்கல்கள் தீர்ப்பார்
வரங்கள் அருளிட வரதனின் அருகில்
ஸ்திரமாய் அமர்ந்தார் சிவனார் இங்கே

ஆனந்தம் வாழ்வில் பெற்றிட நாமே
ஆன்மீக குருவை நாடியே செல்வோம்
ஆன்மா லயித்திடும் தேனம் பாக்கத்தின்
ஆனந்த தக்ஷிணா மூர்த்தியைக் காண

லோக குருவாம் தக்ஷிணா மூர்த்தி
யோகம் அருள அமர்ந்துள்ளார் இங்கே
ஜெகத் குருவாம் நம்மஹா ஸ்வாமி
ஜெகத்தினைக் காக்க அமர்ந்தார் இங்கே

விக்னங்கள் களையும் விக்னேஸ் வரனே
முக்கண்ணன் மைந்தனே மூஷிகம் கொண்டான்
சிக்கென பிடித்திட அக்கணம் அருள்வான்
முக்கண் தேங்காயை முன் படைத்திடவே

வேத நாதனின் பாத நிழலில்
வேதம் கற்றிட வந்தனர் சிறுவர்
வாதில் வென்றிடும் நாரதர் போல
காதில் தேனாய் வேதம் ஓதினர்

அஷ்டமா சித்தியை பெறுதல் போல
இஷ்டமாய் எட்டாண்டு இருந்தார் இங்கே
சிஷ்யர்கள் இன்றி சிஸ்ருஷை இன்றி
இஷ்டமாய் இருந்தார் மஹாஸ்வாமி இங்கே

மௌனமே உருவாய் மூச்சே ஒலியாய்
கவனமாய் அமர்ந்தார் பலரும் இங்கே
புவனத்தை காக்கும் புண்ணியன் தரிசனம்
கவலைகள் தீர்ந்திட பெற்றனர் இங்கே

அந்தமும் ஆதியும் இல்லாதவருக்கு ஓர் அந்தாதி (31.05.13)

(ஓம் பூர்புவஸ்ஸுவஹ - மெட்டு)

காஞ்சிக்கு வந்த கால் அடியே
காலடி பிறந்த சங்கரரே
சங்கரர் வரிசையில் வந்தவரே
வந்துன்னை வணங்கிட நலமடைவோம்

நலன்கள் அனைத்தும் கொடுப்பவரே
கொடுத்துச் சிவந்ததுன் கரங்களே
கரங்கள் கூப்பி வணங்கிடவே
வணங்கியோர் வாழ்வில் உயர்வாரே

உயர்வுகள் தந்திடும் உத்தமரே
உத்தமமே உன் தரிசனமே
தரிசனம் பெற்றிட மகிழ்வோமே
மகிழ்ந்திட கண்கள் கலங்கிடுமே

கலங்கிய நெஞ்சம் தெளிவு பெற
தெளிவாய் நன்மை செய்வீரே
செய்திட்ட பாவம் தீர்ந்திடவே
தீர்ந்திடச் செய்வீர் கவலைகளை

கவலைகள் யாவும் நீ பெற்று
பெற்றிடச் செய்வாய் இன்பங்களே
இன்பங்கள் வாழ்வில் சூழ்ந்திடவே
சூழ்ந்திட்ட துன்பம் நீக்கிடுவீர்

நீக்கம் அறவே நிறைந்தவரே
நிறைந்திடச் செய்வீர் மனதினையே
மனதால் உன்னை நினைத்தாலே
நினைத்த காரியம் வெற்றியே

வெற்றிகள் வாழ்வில் அருள்பவரே
அருள்நிறை இறையே சங்கரரே
சங்கரா என்றே சரணடைய
சரணடைந்தோர் என்றும் மகிழ்வாரே

மகிழ்வார் உன்னை வலம் வந்தே
வலம்வர நலம் பல பெறுவாரே
பெறுவார் வாழ்வில் நிம்மதியே
நிம்மதியாய் தினம் வாழ்வாரே

வாழ்வில் உயர்ந்திட என்றுமே
என்றும் உன்னடி போற்றுவோம்
போற்றிட உன்னை நாடியே
நாடிய பொருள் கை கூடுமே.

மஹாஸ்வாமி தியான மண்டப கானம் (03.06.13)

(100 அடி ஸ்தூபி மண்டபம், 91 சாலை தெரு , காஞ்சிபுரம்)
(பிரம்ம முராரி - மெட்டு)

தங்கச் சிலையாய் பொங்கிச் சிரிக்கும்
எங்கள் காஞ்சி மஹா ஸ்வாமி
மங்காப் புகழை கொண்டவர் நீரே
நீங்கா இன்பம் தருவீர் என்றும்

மங்கை காமாக்ஷி உந்தன் உருவில்
செங்கை களாலே வரங்கள் அருள்வாள்
அங்கையர் கண்ணி மதுரை மீனாக்ஷி உன்
பங்கஜ விழியால் பலன்கள் தருவாள்

சங்கரர் வழியில் வந்திட்ட சங்கரா
கங்கா தரனே அருள்வாய் உடனே
எங்கும் உன் நாமம் ஒலித்திட அங்கே
நீங்கா தருள்வாய் நிலையான இன்பம்

மங்களம் அருளும் மஹா லக்ஷ்மியே
சங்கரர் உன் பெயர் சொல்லிட உடனே
தங்கும் செல்வம் தருவாள் உடனே
பொங்கும் மங்களம் தந்திடுவாளே

சங்கடம் நீக்கிட தரிசிக்க உன்னை
வெங்கல குரலால் சிரிப்பீர் நீரே
பங்கஜ விழியால் பார்த்தே உடனே
சங்கடம் தீர்ப்பீர் சத்குரு நீரே

தங்கக் கலசமாய் மின்னும் கண்கள்
தங்கக் கோபுரம் உந்தன் உருவே
தங்கிடு வீரே எங்கள் மனதில்
தங்கிடும் இன்பம் தந்திடு வீரே

தங்கு தடையின்றி இன்பம் பொங்கிட
பொங்கும் சிரிப்பால் முகமே பொலிந்திட
எங்கும் எப்போதும் துணை நிற்பீரே
ஏங்கும் செல்வம் பதினாறும் தருவீர்

சங்கு சக்கர விஷ்ணுவாய் நீரே
சங்கு கையால் தீர்த்தம் தருவீர்
சங்கடம் தீர்க்கும் அமிர்தம் அதுவே
சங்கடம் நீங்கி சந்தோஷம் அடைவோம்

சங்கரி புத்திரன் கணபதியாக
செங்கைகள் தூக்கி ஆசீர்வதிப்பீர்
உங்களின் தும்பிக்கை கையை கண்டதும்
எங்களின் நம்பிக்கை பெருகிடும் உடனே

சங்கரன் மகனாம் சங்கரன் போல
எங்கும் சென்றீர் ஓர்எட்டு வைத்தே
குங்கும பாதத்தால் குன்று தோராடி
எங்கும் உந்தன் அருளை பொழிந்தீர்

மஹாஸ்வாமியின் அருளால் மஹாஸ்வாமிக்காக மலர்ந்த 100வது பாடல் 15.09.2013

(புனரபி ஜனனம் புனரபி மரணம் , பிரம்ம முராரி - மெட்டு)

நூறாண்டு வாழ்ந்திட வந்தீர் நீரே
ஓராண்டு ஓரிடம் சென்றீர் நீரே
ஓர் ஆண்டியாக வாழ்ந்தீர் நீரே
நீர் ஆண்டு கொண்டீர் எங்கள் மனங்களை

அண்டி வந்தோர்க்கு அபயம் அளித்தீர்
வேண்டி வந்தோர்க்கு வேண்டிய தருள்வீர்
மண்டிக் கிடந்த மாயைகள் அகற்றி
நொண்டிக் கிடந்த ஆத்திகம் வளர்த்தீர்

கண்டவர் எவரும் விண்டிலர் அன்றே
கண் கண்ட தெய்வமாய் வந்தார் இன்றே
கண் தந்த கண்ணப்பர்க்கு காட்சியே தந்த
மண் தந்த மஹேசன் மனிதராய் வந்தார்

அண்டம் ஈரேழும் ஆளும் சிவனே
கண்டம் நீலமாய் மாறிய சிவனே
தண்டம் ஏந்தி தனி வழி காட்ட
மண்டகப் படியாய் தங்கிட வந்தார்

எண்தோள் ஈசன் எளிய உருவில்
மண் மேல் நடந்தார் மக்களை காக்க
விண்ணவர் போற்றும விஸ்வநாதன்
கண்கவர் காவியில் காஞ்சியில் அமர்ந்தார்

எண்ணற்ற கோயிலில் ஏற்றினார் தீபம்
கண்ணற்ற குருடர்க்கும் காட்டினார் தீபம்
பெண்ணற்ற குடும்பத்தில் ஏற்றிட தீபம்
கண்ணுற்று ஏற்றினார் காருண்ய தீபம்

பெண்களை மதித்திட வெண்கலக் குரலால்
ஆண்களுக் களித்தார் அன்றாடம் பாடம்
பெண்களின் கடமையை பேணிக் காக்க
வெண்கலக் குரலால் வேண்டிக் கொண்டார்

பண்ணிய பாவத்தை அறுத்தே இவரே
நுண்ணிய ஆன்மிகம் வளர்த்தார் இவரே
எண்ணிய தீடேறி வாழ்வில் ஒளிர
கண்ணிய வழியை உரைத்தார் நன்றே

மஹாஸ்வாமி மஹிமை கானம் (04-06-2013)

(ஹரே ராம ஹரே ராமா   ராம ராம ஹரே ஹரே -மெட்டு)



ஹர சங்கர சங்கரரே
  ஜெய சங்கர சங்கரரே
காலடி சங்கரரே
  காஞ்சி மஹா ஸ்வாமியே

வேத சாத்திரம் தழைத்திடவே
  பாத யாத்திரை சென்றீரே
நாத வெள்ளம் நிறைந்ததின்றே
  சாதனை செய்தீரே

காஞ்சி மஹா ஸ்வாமியின்
  காலடி பணிந்திடவே
கால மெல்லாம் அவரே
  காத்திடுவார் அன்றோ

திருக் கோயில் ஊர் தோறும்
  திருப்பணி செய்திட்டார்
ஒரு விளக்கேற்றி அவர்
  இருள் அகற்றியே ஒளி தந்தார்

மனக் கவலையால் வருந்திடவே
  குணப் படுத்திடு வாரே
கணப் பொழுதில் அவரே
  மன பாரங்கள் குறைப்பாரே

சம்சார கடலதனை
  நாம் தாண்டியே சென்றிடலாம்
மஹா ஸ்வாமி பாதம் பற்ற
  நமை கரை சேர்ப்பார் தோணியாய்

ஒரு முறை காஞ்சியிலே
  குருவார தினத்தினிலே
குரு வலம் வந்திடவே
  பெறுவோம் நலன்களையே

பிருந்தா வனம் காண
  வருந்துவோர் மகிழ்வாரே
மருந்தாவார் மஹா ஸ்வாமியே
  அருந் துணை ஆவாரே

ஒரு முறை வலம் வரவே
  ஒரு குறை தீர்த்திடுவார்
பல முறை வலம் வரவே
  பல நலன்கள் அருள்வாரே



தேனம்பாக்கம் சிவாஸ்தானம் சிவாலயத்தில்
மஹாஸ்வாமிகளின் சன்னதி



தேனம்பாக்கத்தில் மஹாஸ்வாமிகள் தவமியற்றிய தனியறை



ஓரிக்கை - மஹா பெரியவா மணி மண்டபம்

Visit : www.songsbyshanks.blogspot.in ,
www.perivaproboards.com - bajans on mahaperiyava
www.aanmeegaula.blogspot.in, www.shivsaitours.blogspot.in

குழந்தைகள் வந்தாலே
குழந்தை யாய் மாறிடுவார்
தோழமை பாராட்டி
வேழமாய் மகிழ்விப்பார்

வாயில்லா ஜீவனையே
தாயில்லா சேய் போல
பாய்ந்தே காத்திடுவார்
மாய்ந்தே மருகிடுவார்

காஞ்சியில் அமர்ந்தாரே
கலங்கரை விளக்காக
மலங்கள் விலக்கிடவே
வலம் வந்து பணிவோமே

ஒரு பிடி உணவருந்தி
ஒருநூ றாண்டு வாழ்ந்தாரே
ஒரு தனிப் பரம் பொருளே
குருவாக வலம் வந்தார்

இரு விழி அதனாலே
ஒரு வழி காட்டி அவர்
பெரு வழி அழைத்துச் சென்றார்
அவர் வழி நடந்திடுவோம்

முக் கண்ணன் சிவனாக
தக்க தருணத்தில் அருள்வாரே
முக்கனி சுவை போல
அக் கணம் மகிழ்வோமே

நால் வேதம் காத்திடவே
கால்களால் நடந்தாரே
ஆல் போல் தழைக்கச் செய்தார்
அவர் காலடி தொடர்வோமே.



ஆன்மீக உலா

உணவுடன் ஒரு நாள் ஆன்மீக சுற்றுலா

மந்திராலயம், நவபிருந்தாவனம் உட்பட

மந்திராலயம், ஷீரடி, சனி சிங்கனாப்பூர் உட்பட

உணவுடன் திரிவேணி, கயா, காசி யாத்திரை

SHIVSAI TOURS.

(பருவதமலை பயணக்குழு, மாடம்பாக்கம்)

2228 2203, 99404 47437

காஞ்சி மஹாஸ்வாமி - ஆரத்தி பாடல் 06.07.2013

(ஜெய் ஜெகதீஷ் ஹரே - மெட்டு)

அம்புலி முகத்துடனே - காஞ்சியில்
அமர்ந்திட்ட மஹாஸ்வாமி
நம்பியே வருவோர் நலம் பல பெறுவார்
நம்பியே வருவோர் நலம் பல பெறுவார்
கும்பிட குறை தீர்ப்பீர் - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

காஞ்சியில் அமர்ந்திட்ட சதாசிவ ரூபனே
செஞ்சடை சிவனே நீர்
அஞ்சுவோர் வாழ்வில் அபயம் அளிப்பீர்
அஞ்சுவோர் வாழ்வில் அபயம் அளிப்பீர்
நெஞ்சம் நெகிழச் செய்வீர் - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

உன்திரு முகமே கண்டதும் உடனே
என் குறை தீருமய்யா
வந்திட்ட பக்தர்க்கு வரம்பல அளிப்பீர்
வந்திட்ட பக்தர்க்கு வரம்பல அளிப்பீர்
தந்திடுவீர் இன்பமே - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

சூரிய முகத்தை கண்டதும் உடனே
காரிருள் விலகி டுமே
போரிட்ட வாழ்க்கை வேரோடு மாறும்
போரிட்ட வாழ்க்கை வேரோடு மாறும்
கோரிக்கை நிறைவேற்றுவீர் - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

சந்திர மௌலீஸர் பூஜையை காண
வந்திடும் ஆனந்தமே
நொந்திட்ட மனங்களின் நோய்கள் தீரும்
நொந்திட்ட மனங்களின் நோய்கள் தீரும்
தந்திட தீர்த்தம் நீரே - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

செங்கோல் கைகளில் பாங்காய் ஏந்தி
சங்கரர் உனைக் காண
எங்கள் மனமே ஏங்கிடும் தினமே
எங்கள் மனமே ஏங்கிடும் தினமே
திங்கள் முகம் காண - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

விதி தனை மாற்றிட நதியினைப் போல
வீதியில் நீ நடந்தாய்
கதி நீயே என்று கதறிடு வோரின்
கதி நீயே என்று கதறிடு வோரின்
விதி தனை மாற்றிடுவாய் - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

விஞ்ஞான காலத்தில் அஞ்ஞானம் போக்கி
மெய்ஞானம் உணர்த்த வந்தாய்
அஞ்ஞானம் போக்கி அகம்பாவம் நீக்கி
அஞ்ஞானம் போக்கி அகம்பாவம் நீக்கி
உன்ஞானம் உணர்ந்தோமே - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயலிலும்
உன்துணை வேண்டி நின்றோம்
ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும்
ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும்
என்துணையாய் வாரீர் - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே

ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர
சங்கடம் தீர்ப்பவரே
சம்போ சங்கர சாம்ப சதாசிவ
சம்போ சங்கர சாம்ப சதாசிவ
சஞ்சலம் தீர்த்தருள்வீர் - எங்கள்
காஞ்சி மஹா ஸ்வாமியே



சங்கரகுரு கானம் 14.07.2013

சங்கர குரு சங்கர குரு
சங்கடங்கள் தீர்ப்பவரே சங்கர குரு
சங்கர குரு சங்கர குரு
சந்திரசேகர சரஸ்வதியே சங்கர குரு

சந்திர ஸ்வரூபனே சங்கர குரு
சந்திர மௌலீஸனே சங்கர குரு
சந்ததமும் நினைத்திடவே சங்கர குரு
சந்ததியே தழைக்கச்செய்வீர் சங்கர குரு

சர்வ ரோகம் தீர்த்திடுவீர் சங்கர குரு
சர்வலோக சஞ்சாரி சங்கர குரு
சர்வமும் அறிந்தவரே சங்கர குரு
சர்வேஸ்வர ரூபனே சங்கர குரு

சதுர்புஜ நாராயணா சங்கர குரு
சதுர்யுக புருஷனே சங்கர குரு
சாதுர்மாஸ்ய விரதனே சங்கர குரு
சாதுர்யமாய் காப்பவரே சங்கர குரு

சகதியிலே விழுந்தோரை சங்கர குரு
சகஜமாய் மாற்றுவீரே சங்கர குரு
சக்திதந்து காப்பீரே சங்கர குரு
சக்தி சிவ ரூபனே சங்கர குரு

சந்தியா காலத்தில் சங்கர குரு
சந்திரனாய் ஒளிர்வீரே சங்கர குரு
சந்திர சேகரரே சங்கர குரு
சந்திர காந்தமே சங்கர குரு

சந்தேகம் தீர்பபவரே சங்கர குரு
சந்தோஷம் அளிப்பீரே சங்கர குரு
சந்தஸில் பாடிடவே சங்கர குரு
சந்தனமாய் மணப்பீரே சங்கர குரு

சங்கு கையின் தீர்த்தமே சங்கர குரு
சங்கமத்தின் தீர்த்தமே சங்கர குரு
சங்கு சக்ர தாரியே சங்கர குரு
சங்கர நாரயணனே சங்கர குரு

சர்வ தீர்த்தக் கரையினிலே சங்கர குரு
சாதுர் மாஸ்யம் இருந்தீரே சங்கர குரு
சர்வக்ஞ பீடத்தின் சங்கர குரு
சதஸ்கள்பல நடத்தினீரே சங்கர குரு

உன்னத குருவிற்கோர் உயிரெழுத்து கானம் 13.09.2013

(அய்கிரி நந்தினி - மெட்டு)

அனுதினம் வழிபட அவரவர் வினைகளை
அகற்றியே அருள்வார் மஹா ஸ்வாமி
ஆதவன் போல் இவர் பார்வையினாலே
ஆதங்கம் தீர்த்தே ஆதரிப்பார்

இன்முகத்தோடு இனிதாய் பேசி
இன்னல்கள் தீர்ப்பார் மஹா ஸ்வாமி
ஈசனின் அம்சமாய் ஈவார் முக்தியே
ஈடில்லா அருளை பொழி வாரே

உண்மையின் உருவமாய் உழன்றார் உலகில்
உதாரண புருஷனாய் மஹா ஸ்வாமி
ஊர்தோறும் நடந்தார் உற்சவ சிலையாய்
ஊற்றாய் அருள்மழை பொழிந்திடவே

என்றும் இவரை எண்ணிய உடனே
எண்ணங்கள் ஈடேற செய்திடு வார்
ஏக்கங்கள் போக்கி ஏற்றங்கள் அளிப்பார்
ஏகபாத சிவனாய் மஹா ஸ்வாமி

ஐம்பூதம் அடக்கி ஐந்தொழில் புரிவார்
ஐயங்கள் தீர்ப்பார் மஹா ஸ்வாமி
ஐங்கரன் போல அபயக் கரம்காட்டி
ஐஸ்வர்யம் அளிப்பார் மஹா ஸ்வாமி

ஒருமுறை வணங்கிட ஒருகுறை இன்றி
ஒப்பற்ற வாழ்வை அருள்வாரே
ஓங்கார நாதனாய் ஓசை இன்றி
ஓர் துயர் தீர்ப்பார் மஹா ஸ்வாமி

மஹா ஸ்வாமி - புஷ்பாஞ்ஜலி பாடல்

பூப்போன்ற காஞ்சி மஹா ஸ்வாமி
பூமுகம் போற்றி வணங்கிடுவோம்
பூப்போன்ற பாதத்திலே நாம்
பூவால் பூஜித்து பூரிப்போமே.

ரோஜாப் பூ கொண்டு வந்தே காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
ஜோராய் சிரித்தே வாழ்த்திடுவார் மன
பாரம் குறைத்தே மகிழ்விப்பாரே

மல்லிகைப் பூ கொண்டு வந்தே காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
துள்ளியே துயரங்கள் தீர்த்திடுவார் அவர்
அள்ளியே வரங்கள் வழங்கிடுவார்

சம்பங்கிப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
தன்பங்கிற்கவர் அருள்புரிவார் - என்றும்
வம்பு வழக்கின்றி வாழச் செய்வார்

முல்லைப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
எல்லை இல்லாத அருளாளரே - வாழ்வில்
துன்பங்கள் இன்றி அருள் புரிவார்

பூவெல்லாம் பூத்ததின்றே அவர்
பூப்பாதம் தொட்டிடவே
பூமாரி பொழிந்திடுவோம் நாம்
பாமாலை சூட்டி மகிழ்ந்திடுவோம்

மருக்கொழுந்து கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
அருந்தொண்டு புரிந்திடவே - அவர்
உருக்கொண்டு உள்ளத்தில் உறைந்திடுவார்

மகிழம் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
அகமகிழ்ந்தே அருள்வார் அவர் - உடன்
மகவை ஈனும் பாக்கியமே

செண்பகப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
முற்பகலில் வேண்டியதை - அவர்
பிற்பகல் வரும் முன் அருளிடுவார்

ஜாதிப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
ஜோதி ரூபமாய் தெரிவார் அவர் - நம்
ஆதி அந்தம் மாற்றிடுவார்

பூ லோகம் காத்திடவே சிவன்
பூமியில் இறங்கி நடந்திட்டாரே
பூர்வ ஜென்ம வினை தீர இவர்
பூ பாதம் பூஜிப்போமே

தாமரைப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
பொற்றாமரை புன் சிரிப்பால் - அவர்
பொற்காலம் நமக்கே அருளிடுவார்
சாமந்திப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
பொன் அந்தி மாலையாக - அவர்
நம்மன காயங்கள் ஆற்றிடுவார்

தும்பைப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
அம்பிகை உருவில் அருள்வார் அவர் - என்றும்
நம்குறை தீர்த்து மகிழ்வார் அவர்

அரளிப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
அபய ஹஸ்தம் காட்டிடுவார் - அவர்
வரங்கள் வழங்கி வாழ்த்திடுவார்

பூத்திட்ட பூவாய் நாளும் இவரே
பூக்கச் செய்வார் நம்மை எல்லாம்
பூமீஸ்வரன் இவர் பாதத்திலே நாம்
பூமாலை சாற்றி வணங்கிடுவோம்

மந்தாரப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
செந்தா மரை கைகளாலே - அவர்
தந்தே மகிழ்வார் ஆசிகளை

நீலோத் பலம் கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
ஆத்மபலம் என்றும் அருளிடுவார் - அவர்
தேகபலம் தந்து தேற்றிடுவார்

மனோ ரஞ்சிதம் கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
மனநிம்மதி தந்திடுவார் - உடன்
திருமண பாக்கியம் நல்கிடுவார்

சங்குப் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
தங்கும் இன்பம் தந்திடுவார் - அவர்
பொங்கும் மங்களம் பொழிந்திடுவார்

பூ வாலே பூஜித்திட இவர்
பூப்போல் நம்மை சிரிக்கச் செய்வார்
பூவிழி யால் ஆசிதந்து அவர்
பூப்போல் வாழ்வை மணக்கச் செய்வார்

தாழம் பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
வேழ முகனாம் கணபதியாய் - அவர்
தாழா கீர்த்தியை தந்தருள்வார்

பாரிஜாதம் கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
பாரினில் சிவனாய் அருள்வாரவர் - நம்
கோரிக்கை நிறைவேற்றி கைகொடுப்பார்

நாக லிங்கப்பூ கொண்டே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
ஆக மங்கள் அறிந்தவரே - அவர்
நோகாமல் நம்நோய் தீர்த்திடுவார்

வில்வ தளம் கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
சொல்லி மாளா துயர்தீர்ப்பார் - அவர்
கிள்ளி எரிவார் நம் கவலைகளை

கொன்றை பூ கொண்டு வந்தே - காஞ்சி
மஹா ஸ்வாமியை பூஜை செய்தால்
கன்றை பசுவது காப்பதுபோல் - அவர்
என்றும் நம்மை காத்திடுவார்

பாதுகா பஞ்சகம் 24.05.2013

போற்றிட காஞ்சி மஹானின் திருவடி
பெற்றிடுவோம் வாழ்வில் என்றும் உயர்வே
காற்றாடிபோல் வானில் பறப்போம் நாமே
நூற்பிடி என்றும் அவர்கை இருக்க

போற்றிடுவோம் காஞ்சி மஹானின் திருவடி
வென்றிட செய்வார் வாழ்வில் நமையே
குன்றிட செய்வார் குறைகள் தனையே
நின்றிட செய்வார் நலன்கள் அனைத்தும்

போற்றிட காஞ்சி மஹானின் திருவடி
பெற்றிடுவோம் வாழ்வில் என்றும் இன்பம்
கற்றிடுவோம் வாழ்வில் கல்லாத வையே
பெற்றிடுவோம் நாம் பொற்காலம் வாழ்வில்

போற்றிடுவோம் காஞ்சி மஹானின் திருவடி
ஏற்றிடுவோம் நாம் குருவாய் அவரை
ஏற்றிடுவோம் ஓர் தீபம் தினமே
பெற்றிடுவோம் வாழ்வில் ஒளியை நாமே

போற்றிட காஞ்சி மஹானின் திருவடி
வெற்றிட மனதில் இறைவன் அமர்வான்
கற்றிட கடவுளின் கருணையை நாமே
முற்றிட பக்தி முக்தியும் கிட்டும்



காஞ்சியின் மாமுனி மஹாபெரியவா

14.01.2013 (ரகுபதி ராகவ ராஜாராம் - மெட்டு)

Sri Mahaswami in a meditative mood at Sankara Math, Kumbhakonam - 1945

காஞ்சியின் மாமுனி மஹாஸ்வாமி
காலத்தை வென்ற மஹாஸ்வாமி
காருண்ய ரூபனே மஹாஸ்வாமி
காலமெல்லாம் நமக்கருள்புரிவாரே
காருண்ய ரூபனே மஹாஸ்வாமி
காலமெல்லாம் நமக்கருள்புரிவாரே

காசியும் குமரியும் காலாலே
கார்த்திகை குளிரிலும் நடந்தீரே
காலால் உலகை அளந்தீரே
காலடி பணிந்தோம் மஹாஸ்வாமி

காஞ்சித் தலைவனாய் வாழ்ந்தீரே
காமாக்ஷி அன்னையை போற்றினீரே
காம தஹன மூர்த்தியாக
காஷாயம் தரித்து வாழ்ந்தீரே

காட்டில் முட்களில் நடந்தீரே
காட்சியே தந்தீர் கிராமங்களில்
கார்த்திகை தீபமாய் கண்டனரே
காதலால் கண்ணீர் சொரிந்தனரே

காடும் மேடும் உன்காலடியால்
காய்த்துக் குலுங்கின உன் முச்சால்
காஞ்சி மன்னன் உனைக்காண
காடும் நாடானதுன் அருளாலே

காலடியால் வழி காட்டிச்சென்றீர்
காலடி போற்றி மகிழ்வோமே
காலடி தொடர்ந்து நலன்பெறுவோம்
காலமெல்லாம் கைப்பிடுவோம்

காயங்கள் ஆறிடும் தன்னாலே-மனக்
காயங்கள் ஆறிடும் உன்னாலே
காருண்ய ருப சிவனே நீர்
கார்கால மேகமாய் அருள்வீரே

கானல் நீராய் வாழ்வினிலே
காய்ந்த சருகானோம் நாங்களே
காற்றாய் உன்தன் வரவு கண்டு
காற்றாடி யாய்மேல் பறந்தோமே

காவல் தெய்வம் நீரே தான்
காத்து ரட்சிப்பாய் எங்களையே
காற்றாய் உன்பெயர் ஸ்வாசிப்போம்-மூச்சுக்
காற்றாய் உள்ளிருந்தருள்வீரே

மஹா ஸ்வாமி மஹிமை காணம்

ஆறாத துன்பங்கள் தீர்ப்பார் - மனதில்
மாறாத மனக் காயம் மறைத்தே அருள்வார்
போறாத காலமும் பொற்காலம் ஆகும்
பொற்பாத தரிசனம் பெற்றிட்டால் நாமே

வேராக வேதத்தை வளர்த்தார் - ஆனி
வேராக ஆன்மீகம் அன்றாடம் வளர்த்தார்
யாராக இருந்தாலும் ஆசிர்வதிப்பார் - அவர்
நேராக பார்த்திட நேராதே துன்பமே

சோராத சோம்பலை அழிப்பார் - நெஞ்சின்
போறாத இன்பம் பொங்கிடச் செய்வார்
வாராத செல்வம் வரவழைப்பார் - என்று
வாராதே துன்பம் இவரை நாம் வணங்க

தாழாத கீர்த்தியை தருவார் - மனம்
பாழான போதும் நல்வாழ்வை தருவார்
வாழாத வாழ்க்கையை உரைப்பார் என்றும்
மேலான வாழ்க்கையை வாழ்ந்திடச் செய்வார்

தேனம்பாக்கத்தில் ஓர் நாள் - மலைத்
தேனாய் இனிக்கும் வாழைப் பழம்தந்து
வீணாய் குடித்து திரிந்தோரை - இவர்
தானாய் அவர் மனம் மாறிடச் செய்தாரே

சிவபூஜைக்கு தினம்வில்வம் தந்த - ஒரு
சிவ பக்தன் உயிர்பிரிந்த போது - அவன்
பாவத்தை போக்க பதிமூன்று முறைமுங்கி
மோட்சத்தை அளித்தார் மோனத் தவஞானி

வேதம் நிறைந்த தமிழ்நாடு - மஹா பெரியவாளின் வேதனையும் வேண்டுகோளும்

வேதமிருந்தால்தான் லோகம் நன்றாக இருக்கும், ஆத்மாவும் க்ஷேமமடையும் என்பது என் அபிப்ராயம். இந்தப் பெரிய மூலதனம் இப்போது வீணாகப் போயிருக்கிற நிலை மாறி, இதை மறுபடி தழைக்கும் படியாகப் பண்ணவேண்டுமென்பதே எனக்கு ஸதா விசாரமாக இருக்கிறது. நிர்பபந்தத்துக்காக இல்லாமல் , ஆசையோடு ஆர்வத்தோடு நீங்கள் எல்லோரும் சேர்ந்து இது வேத பூமி என்பதை மறுபடி நிஜமாக்கப் பிரயாஸைப் பட வேண்டும் தமிழ்நாட்டுக்கு இதை நான் முக்கியமாகச் சொல்கிறேன்.

வேத விருக்ஷம் நன்றாக விழுது விட்டு வளர்ந்த மண் இந்தத் தமிழ் பூமி "வேதம் நிறைந்த தமிழ்நாடு" என்று பாரதி பாடியிருப்பது கவியின் அதிசயோக்தி இல்லை. அப்படித்தான் தமிழ்தேசம் இருந்திருக்கிறது. சங்க காலத்திலிருந்து, எங்கே பார்த்தாலும் வேத வேள்விகளை வானளாவப் புகழ்ந்து சொல்லியிருக்கிறது. சங்கம் வளர்த்த பாண்டிய ராஜாக்கள் வைதிகமான யக்ஞாதிகளை நிறையச் செய்து , "பல் யாகசலாலை முது குடுமிப் பெருவழுதி" என்ற மாதிரியான பட்டங்களைத் தங்களுக்குப் பெருமையோடு சூட்டிக் கொண்டிருக்கிறார்கள். திருக்குறளில் பல இடங்களில் வேதநெறி சிறப்பித்துப் பேசப்படுகிறது. வேதத்திலுள்ள பஞ்ச மஹாயக்ஞங்களைத் தான் திருவள்ளுவர் சொல்கிறார்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை

ராஜநீதி தவறினால் கோ-ப்ராம்ணர்களுக்கு க்ஷீணம் உண்டாகும் என்பது ஒரு முக்யமான வைதிகக் கொள்கை. கோ (பசு) வையும் , பிராம்மணர்களையும் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், கோ தருகிற நெய், பால், சாணம் முதலியன தான் யக்ஞ திரவியங்களில் முக்யமானவை, யாகத்தை பண்ணுகிற அதிகாரம் பெற்றவர்களோ பிராம்மணர்கள் - என்பது தான்.

இதே மாதிரி கோ-பிராம்ணர்களை திருவள்ளுவர் குறிப்பிட்டு, அரசின் நீதித் தண்டம் தவறினால், இந்த இருவராலும் கிடைக்கிற லோக உபகாரம் வீணாகிவிடும் ன்கிறார்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

"ஷட் கர்ம நிரதர்" என்று பிராம்மணர்களுக்கு உள்ள வைதிகமான பெயரை, அப்படியே மொழிபெயர்த்து "அறு தொழிலோர்" என்கிறார். அத்யயனம்-அத்யாபனம்(தான் வேதம் ஓதுவது-பிறருக்கும் ஓதுவிப்பது), யஜனம்ஸ்ரீயாஜனம் (தான் வேள்வி செய்வது-பிறருக்கு வேள்வி செய்விப்பது) தானம்- ப்ரதிக்ரஹம்

(வேள்வியில் தானே தக்ஷிணை தருவது. இம்மாதிரி செலவழிப்பதற்கு வேண்டிய மூலதனத்துக்காகவே பிறத்தியாருக்கு சிக்ஷை சொல்லி முடித்தபின் அவர்களிடமிருந்து தக்ஷிணை வாங்கிக் கொள்வது) என்ற ஆறும் தான் பிராமம்ணனுக்கு உரிய ஷட்கர்மாக்கள். இது மநுஸ்மிருதியில் சொன்னது.

இங்கே ஸமஸ்த லோகங்களுக்கும் ஸமஸ்த பிராணிகளுக்கும் க்ஷேமத்தை தரக்கூடியதான வேத மரபு நன்றாக தழைக்க வேண்டும். இது தான் நாம் பரமேச்வரனிடம் எப்போதும் செய்து கொள்ள வேண்டிய பிரார்த்தனை.

இப்போதே அநேக வேதசாகைகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. மற்றவையும் அழியும்படி விடவே கூடாது. இதைவிடப் பெரிய ட்யூட்டி, கடமை எதுவும் நமக்கில்லை. நமக்கிருக்கிற புத்தி பலம், திரவிய பலம், கூட்டுறவு சக்தி எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நாம் பண்ணவேண்டிய காரியம், தற்போது எங்கெங்கேயோ கொஞ்சம் கொஞ்சம் உயிரை வைத்துக் கொண்டிருக்கும் வேத சாகைகள் அழிந்து போய்விடாதபடி, அவைகளுக்கு ஆக்ஸிஜன் கொடுத்து உயிரூட்டுவது தான்.

மஹாஸ்வாமிகளின் மேற்படி வார்த்தைகளை தினந்தோறும் மனதில் உருவேற்றிக் கொண்டு நாம் அனைவரும் வேதம் தழைக்க தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று விஞ்ஞாபித்துக் கொள்கிறேன். தங்கள் பகுதியில் உள்ள பேத பாட சாலைகளுக்கு அவ்வப்போது விஜயம் செய்து வேத பாராயனத்தை கேட்டு மகிழுங்கள். அவர்களுக்கு தேவையான திரவியங்களை அளித்து பெற்ற பிறவியின் பயனைப் பெறுவீர்.

மஹாபெரியவா 1967ம் ஆண்டு தேனம்பாக்கத்தில் துவங்கிய வேத பாடசாலைக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்து மஹாஸ்வாமிகளின் பேரருளுக்கு பாத்திரமாவீர். சமயம் வாய்க்கும் போது மஹாஸ்வாமிகள் சற்றேறக் குறைய எட்டு ஆண்டுகள் தங்கிய சின்ன காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவிலிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள தேனம்பாக்கம் சிவாஸ்தானம் , வேத பாடசாலை, மஹாஸ்வாமி சன்னதி ஆகிய இடங்களை தரிசித்து மனம் நெகிழ்வீர்.

நன்கொடைகளை வழங்க வேண்டிய முகவரி.

ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா ட்ரஸ்ட்

100 அடி ஸ்தூபி மண்டபம், 91 சாலை தெரு, காஞ்சிபுரம் 631502.

Cheque மற்றும் Demand draftகளை அனுப்ப வேண்டிய முகவரி:

Sri Sankara Bhaktha Jana Sabha Trust

New No. 70 (Old No. 199A) , St. Mary's Road, Abhiramapuram, Chennai - 600 018. phone : 2499 6823 , 90030 76823

மஹாஸ்வாமிகள் தவமியற்றிய தனியறையை சின்ன காஞ்சிபுரம் அருகில் உள்ள தேனம்பாக்கம் சிவாஸ்தானம் சிவாலயத்திலும்

மஹாஸ்வாமிகள் பயன்படுத்திய பொருட்கள் எனும் பொக்கிஷங்களை பெங்களூர் சாலையில் காஞ்சிபுரம் அருகில் வெள்ளை கேட் பகுதியில் உள்ள வேடல் தலத்திலும்

மஹாஸ்வாமிகளின் புன்னகை தவழும் பொன் முகத்தை காஞ்சி சங்கர மடத்திற்கு எதிர் புறம் சற்று மேற்கில் உள்ள 100 அடி ஸ்தூபி மண்டபத்திலும்

மஹாஸ்வாமிகளின் மஹிமைகளை சந்திர சூரியர் உள்ள வரை உலகிற்குணர்த்த பல சிற்ப அதிசயங்களுடன் காஞ்சி - உத்திரமேரூர் சாலையில் பாலாற்றின் கரையில் ஓரிக்கையில் கட்டப்பட்டுள்ள மணி மண்டபத்தையும் தவறாது கண்டு களிப்பீர். . .

30.12.2012 முதல் மஹாஸ்வாமிகளை பற்றி பாடல்களாக எழுதும் மஹா பாக்கியத்தை பெற்றுள்ளேன். இவ்விரு வருடங்களில் 250க்கும் மேற்பட்ட பாடல்களை எழுத வைத்துள்ளார். மஹாஸ்வாமிகளின் 21ம் ஆண்டு ஆராதனை நாளான 29.12.2013 அனுஷத்தன்று அடியேனின் முதல் தொகுப்பு "**சங்கரானந்தம்**" என்னும் தலைப்பில் உங்கள் நெஞ்சங்களில் உள்ள மஹாபெரிவாளின் பக்திக்கு மஹாஸ்வாமிகளின் திரு அருட்பிரஸாதமாக இத்தொகுப்பாக வெளிவந்துள்ளது. மற்ற பாடல்களையும் மஹாபெரியவாளின் பக்தர்களுக்கு இலவசமாக சமர்ப்பிக்க எண்ணம் கொண்டுள்ளேன். வியாபார நோக்கின்றி அவற்றை அனைவருக்கும் (புத்தகமாகவும் ஒலிப் பேழையாகவும்) வழங்க தங்களால் இயன்ற உதவிகளை அளிக்க முன்வரும் நல்இதயங்கள் தொடர்பு கொள்ளவும். 12.06.2014 அன்று மஹாஸ்வாமிகளின் 121ம் ஆண்டு ஜெயந்தி நாளையொட்டி 121 பக்திப் பாடல்களுடன் அடுத்த "**சங்கரானந்தம்**" வெளிவந்துள்ளது. பெருமளவில் (அச்சு விலையில்) இப்புத்தகங்களை பெற்று இலவசமாக விநியோகிக்க விரும்பும் மஹாஸ்வாமி பக்தர்கள் அணுகவும்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.

98847 18 324 , 99404 47 437.

காஞ்சி மஹாஸ்வாமிகளின் மஹிமைகளை போற்றும் இணையதளங்கள்

http://mahaperiyavaa.wordpress.com

www.kamakoti.org

http://www.periva.proboards.com/

www.mahaperiyava.net

http://mahaperiyavaa.wordpress.com/2014/01/09/consolidated-links-of-all-videos-of-periyava/

www.manimantapam.org

http://srisrisrimahaperiyaval-meelaadimai.blogspot.in/

http://mahaperiavaamyguru.blogspot.in/

http://www.mahaperiyava.info/

http://kanchimamuni.org/

http://vandeguruparamparaam.blogspot.in/

http://mahaperiyava.tripod.com/

http://www.mixcloud.com/tag/kanchi-periva/

http://www.songswale.com/kanchi-mahaperiyava.html

http://www.srikanchimahaswami100.org/

முகநூலிலும் (facebook) பல பக்கங்களில் பல அரிய படங்களும் மஹாஸ்வாமிகளின் மீதான பரவசமூட்டும் பாடல்களும் மஹாஸ்வாமிகள் அருளிய அருள் மொழிகளும் பல பக்தர்களின் மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளும் காணக் கிடைக்கின்றன. அவற்றில் சில பக்கங்கள் : Sage of kanchi, periyava charanam, mahaperiyavah ஆகியன.

தேனம்பாக்கத்தில் மஹாஸ்வாமிகள் தவமியற்றிய தனியறை

பாத கமலங்களை பணிந்து
பாதக மலங்களை போக்கிடுவோம்...

சங்கரானந்தம்